**மேரி ஜோன்ஸ்**

நீ மிகவும் எளிதாக வேதாகமத்தை பெற்றுக் கொள்ள முடிகிறது. அதனால் அதன் மதிப்பு அநேக முறை உனக்குத் தெரிவதில்லை. 18ஆம் நூற்றாண்டில் மிகவும் பணம் படைத்தவர்களுக்கு மட்டுமே வேதாகமம் வாங்கி படிக்கக் கூடிய நிலை இருந்தது. பல வேளைகளில் பணம் இருந்தாலும் வேதாகமம் வாங்க முடியாத நிலை இருந்தது.

உன் கையில் இவ்வளவு எளிதாக வேதாகமம் வந்து கிடைக்க காரணமாயிருந்தது உன்னைப்போல 15 வயதுடைய மேரி என்ற ஒரு பெண் தான். அவள் 1784-ம் ஆண்டு வேல்ஸ் தேசத்தில் பிறந்தாள். அவளது பெற்றோர் மிகவும் ஏழ்மையில் வாழ்ந்தனர். தந்தையார் நெசவுத்தொழில் செய்து வந்தார். தனது 8-வது வயதில் தான் பள்ளிக்குச் சென்றாள். எழுத படிக்கத் தெரிந்த நாளிலிருந்து தனக்கு என ஒரு வேதம் வாங்கவேண்டும் என்று சிறிது சிறிதாக பணம் சேர்த்தாள். அவர்கள் சென்ற சபையில் ஒரே ஒரு குடும்பத்தினர் மட்டும் வேதாகமம் வைத்திருந்தனர். மேரி வாரத்தில் சனிக் கிழமைகளில் சுமார் 2 மைல் நடந்து அவர்கள் வீட்டிற்குச் சென்று வேதத்தை வாசித்து சில வசனங்களை மனப்பாடம் செய்தாள். அதை வீட்டிற்கு வந்து தன் பெற்றோருடன் பகிர்ந்துக் கொள்வாள்.

இவ்வாறு 6 ஆண்டுகள் மனப்பாடம் பண்ணியதோடு, அருகில் வசிப்பவர்களுக்கு சிறு சிறு வேலைகள் செய்தும், வீட்டில் கோழி வளர்த்தும், அதன் முட்டைகளை விற்றும் சிறுக சிறுக பணம் சேர்த்து வந்தாள்.

வேதாகமம் வாங்குவதற்குத் தேவையான பணம் சேர்ந்த உடன் அவள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால், அவ்வேத புத்தகத்தை அவள் வாங்குவதற்காக 25 மைல்கள் பாதரட்சைகள் இன்றி அவள் நடந்து செல்லவேண்டி இருந்தது. அங்கு சென்றாலும் வேதாகமம் கிடைக்குமா என்பது சந்தேகம். மேரி தேவன் பேரில் விசுவாசித்து அதிகாலையில் எழுந்து அந்த 25 மைல்கள் நடந்து சார்லஸ் என்பவர் வீட்டை அடைந்தாள்.

அப்போது அங்கு இருந்த போதகர் தன்னிடம் ஒரு சில வேதாகமமே இருப்பதாகவும், அதற்காக வேறொருவரிடம் பணம் பெற்று விட்டதாகவும் கூறினார். இதைக் கேட்ட மேரி சத்தமிட்டு அழுதாள். அப்போதகர் அவளுடைய வாஞ்சையை பார்த்து தான் மற்றவருக்கு தர இருந்த வேதத்தைக் கொடுத்தார். மகிழ்வுடன் பெற்றுக் கொண்ட மேரி மீண்டும் 25 மைல்கள் நடந்து வீட்டிற்குச் சென்றாள். இச்சம்பவம் அப் போதகரை வெகுவாக அசைத்தது.

அப்போதகர் இந்தச் சம்பவத்தை பிறரோடு பகிர்ந்து எப்படியாயினும் மக்கள் வேதாகமத்தை பெற்றுக் கொள்ள வழி செய்யவேண்டும் என்று விதையை போட்டார். இதுவே வேதாகமம் எல்லாரிடமும் கிடைக்க வழி வகுத்தது.